முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்
அசல் வழக்கு எண். 9/2019

இன்று 2025 ம் ஆண்டு ஜூன் திங்கள் 25ம் நாள் இன்று இந்த வா.சா.2ன் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.A.வனிதா, M.S.W., L.L.B., அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மாரிமுத்து | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | சுப்பையா | கிராமம் | : | அனுப்பர்பாளையம் |
| வயது | : | 75 | தாலூக்கா | : | திருப்பூர் |
| நாள் | : | 25-06-2025 | மாவட்டம் | : | திருப்பூர் |

சாட்சி மீண்டும் முன்னிலையாகி சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :

1. நான் எங்கு குடியிருந்து வருகிறேன் என்றால் வேலம்பாளையம் கிராமம், அனுப்பர்பாளையத்தில் குடியிருந்து வருகிறேன். எனக்கு பூர்வீக சொத்துக்கள் எங்குள்ளது என்றால் க.ச.எண்.320, 321, 322 என தொடர்ச்சியாக அனுப்பர்பாளையத்தில் உள்ளது. தாவா தடமும் என் தோட்டமும் எவ்வளவு தூரத்தில் உள்ளது என்றால் 500 அடி தூரத்தில் உள்ளது. என் தோட்டம் தாவா சொத்தில் இருந்து 1-1/2 கி.மீ தூரத்தில் உள்ளது என்றால் சரியல்ல.

2. சாமுண்டிபுரம் ரோட்டை தாண்டி தான் என் தோட்டம் உள்ளது என்றால் சரியல்ல. அந்த ரோடு எனது தோட்டத்திற்கு கிழபுறம் உள்ளது. வாதி, பிரதிவாதிகளை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். உறவினர்களா என்றால் உறவினர்கள் தான். தாவாச் சொத்துக்கு வடபுறமும், கிழபுறமும் உள்ள சொத்துக்கள் ஆதியில் யாருக்கு பாத்தியம் என்றால் தம்பண கவுண்டர், குழந்தையப்ப கவுண்டருக்கு பாத்தியம். அதற்கு முன்பு யாருக்கு பாத்தியம் என எனக்கு தெரியாது.

3, தாவா தடம் வாதிக்கு பாத்தியப்பட்டது என்று முதல் விசாரணையில் சொல்லி உள்ளது எந்த ஆவணத்தின்படி என்றால் நான் ஆவணங்களை பார்த்தது இல்லை. பிரதிவாதிகளின் முன்னோர் என்ன ஆவணம் எழுதிக் கொடுத்தார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. வாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்தின் காலை எண் தெரியுமா என்றால் 421 ஆகும். வாதிகளின் சொத்துக்கு மேல்புறம் என்ன சொத்து உள்ளது என்றால் தெரியாது.

4. தாவா தடம் மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி எதுவரை செல்கிறது என்றால் வெங்கடாசலக் கவுண்டர் பூமி வரை செல்கிறது. பொன்னுச்சாமி வகையறா பூமி எங்குள்ளது என்றால் வாதியின் சொத்துக்கு மேல்புறமுள்ளது. தாவா தடம் 453, 454 நெ. காலை சொத்துக்கு பாத்தியம் என்றால் சரிதான். க.ச.எண்.253 ல் பொன்னுச்சாமிக்கு பாத்தியப்பட்ட சொத்து உள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியாது. பிரமாண வாக்குமூலத்தில் தென்புற எல்லை அடைக்கப்பட்டுள்ளது என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல.

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

Sd/-A.Vanitha
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.